## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.392/2020 வா.சா.1 சத்தியமூர்த்தி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 23.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

9) நான் தாக்கல் செய்து உள்ள வா.சா.ஆ. 16 மற்றும் வா.சா.ஆ. 17 தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை தொடர்பான மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்ற அ.வ.எண். 176/2020 வழக்கில் பிரதிவாதிகள் அனைவரையும் தோன்றாதரப்பினராக்கி தீர்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒரு தலைபட்ச தீர்ப்பை நீக்கறவு செய்ய அவ்வழக்கு பிரதிவாதிகள் மனு செய்து எண்ணிடப்படாமல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்புரையும் , தீர்ப்பாணையும் இறுதியானது அல்ல என்பதால் அவற்றின் பெயரில் நாங்கள் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

10) 21-06-2021 தேதியிட்ட வா.சா.ஆ. 18 உயில் சாசனத்தை நான் என் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 18 உயிலின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 18 உயிலின் அசல் என் வசம் இல்லை என்றால் சரியல்ல. அதை என் வழக்கறிஞரிடம் நான் கொடுத்து உள்ளேன். நான் சொல்வது போல் உயில் சாசனம் இல்லை என்றும் அவ்வாறு இருந்து இருந்தால் நான் அசலை தாக்கல் செய்து இருப்பேன் என்றும் சான்றிட்ட நகலை வைத்து எவ்வித உரிமையும் கோர இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 18 உயில் போலியானது என்பதால் தான் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) நான் தாக்கல் செய்து உள்ள வா.சா.ஆ. 18 உயிலின் சான்றிட்ட நகலின் முதல் இரு பக்கங்களில் கைரேகையே இல்லை என்றால் அசலில் உள்ளது. அசலில் கைரேகை இல்லாததால் தான் சான்றிட்ட நகலிலும் கைரேகை இல்லை என்றும் சான்றிட்ட நகலில் கைரேகை இல்லாத போது அது அசலில் உள்ளது என சொல்வதை ஏற்க இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 16 முதல் வா.சா.ஆ. 18 ஆவணங்களை குறியீடு செய்ய கூடுதல் சாட்சிய வாக்குமூலம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 16 முதல் வா.சா.ஆ. 18 ஆவணங்களை பொறுத்து கூடுதல் சாட்சிய வாக்குமூலம் அளிக்காததால் அந்த ஆவணங்கள் சாட்சியமாக ஏற்றுக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி